# புலம்பல்கள்.!



தமிழ்மணம் பரிந்துரை
Pathivu Toolbar ©2010thamizmanam.com

## பதிவுலகம் குறித்த நர்சிம்மின் அதிரடி பேட்டி

Posted by ஆதிமூலகிருஷ்ணன் at 7:34 PM

உள்ளுக்குள் கனன்று கொண்டிருக்கும் எழுத்தார்வம் உந்தித் தள்ளுகையில், அதற்காக லௌகீக வாழ்க்கையில் எந்த சமரசமும் செய்துகொள்ளாமல் எழுத்தில் தடம் பதிப்பது கொஞ்சமல்ல மிகவே சவாலானது என்பதை அறிவோம். தமிழ் எழுத்தாளர்களின் எத்தனையோ பேரின் வாழ்வுகள் உதாரணங்களாக கண்முன் நிற்கின்றன. அதே ஆர்வம் கொண்ட இன்றைய தலைமுறைக்கு பாதையை இன்னும் எளிமையாக்க இருப்பதே இந்த வலைப்பூக்கள். சமரசங்கள் இல்லாத வெற்றிக்காக தீராத வாசிப்பும், உழைப்பும், திறனும் அவசியமாகிறது. அவ்வாறு அமைந்த மிகச்சிலரையும் வலையுலகில் ஆங்காங்கே காணமுடிகிறது. அதில் ஒருவர் பிரபல பதிவர், நண்பர் நர்சிம். பார்த்துக்கொண்டிருக்கும் போதே அடுத்தடுத்த படிகளில் பயணம் செய்வது மற்றும் மதிப்புக்குரிய மூத்தோரின் அன்பைப் பெற்றது போன்றவை அதற்கான சாட்சிகள்.

நர்சிம்மிடம் ஒரு உணவு வேளையின் போது, கடந்த இரண்டு வருடங்களாக அவரது வலைப்பூ அனுபவம் குறித்தும், இன்னும் சிலவற்றைக் குறித்தும் சில கேள்விகளை முன்வைத்தேன். அந்த பதில்களை வலையேற்ற அனுமதித்த நர்சிம்முக்கு நன்றி. இதோ அவரது பகிர்வுகள்..



**(இதை பேட்டியாகப் போடும் அளவிற்கு என் நிலமை மோசமாகப் போய்விட்டதா ஆதி? நான் இன்னமும் எழுதிக்கொண்டுதானே இருக்கிறேன்.. பேட்டி அது இது என்று மூலையில் அமரவைக்காமல் போகமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்..;-) - நர்சிம்)**

***1. வலைப்பூவில் எழுதத்துவங்கும் முன்னரே உங்கள் எழுத்தார்வத்தை அடையாளம் கண்டு கொண்டீர்களா? எழுதுவது குறித்த அப்போதைய உங்கள் எண்ணம் என்ன?***

இல்லை. எல்லோருக்கும் வரும் விடலைப்பருவ கவிதை எழுதும் சந்திரிக்கா சோப்பு (அரிப்பு) சமாச்சாரம் மட்டும் தான். ஆனால் அவற்றைக் கவிதை என்று சொன்னால்



பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

### Followers

### Blog Archive

▼ 2010 (55)
▼ May (12)
ரசி
பதிவுலகம் குறித்த நர்சிம்மின் அதிரடி பேட்டி
தரமான ஒரு பதிவு
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்..
காதலிக்க நேரமில்லை
எக்ஸாம் பூதம்
பன் பிக்சர்ஸ்..

அடுத்த வேளை சோறு கிடைக்காது. கவிதைகளை விட அது முடிந்தவுடன் ஒரு முற்றுப்புள்ளி வைத்து அதை நோண்டி நோண்டி பெரிய புள்ளியாக மாற்றி அதில் இருந்து ஒரு ஓவியம் உருவாக்கி விடுவது வாடிக்கை. அந்த அளவிற்கு சந்திரிக்கா சோப்பு.

***2. எந்த மாதிரியான எழுத்துக்களை மிகப்பிரியமாக வாசித்து வருகிறீர்கள்?***

இதற்கு சட்டென்று பதில் சொல்லவேண்டும் என்றால், பதிவுலகம் வந்திருக்கக்கூடாது. உண்மை. முன்பெல்லாம் கையில் கிடைக்கும் புத்தகங்களை வாசித்து பரவாயில்லையே அல்லது பரவாயில்லை என்று முடித்துவிடுவது வழக்கம். இப்பொழுது கால் புள்ளி அரைப்புள்ளியில் எல்லாம் மாற்றுக்கருத்தோ, அரசியலோ என கொஞ்சம் வாசித்தபின் யோசிக்க வைக்கும் படியாக வாசிப்பு வளர்ந்திருக்கிறது. அதற்கு பதிவுலம் தான் காரணம். எளிமையான எதையும் வாசிக்கப்பிடிக்கும். கடினமான எதையும் புரிந்து கொள்ளப் பிடிக்கும்.

***3. வலைப்பூ எப்படியான வாசல்களை உங்களுக்குத் திறந்து தந்ததாக உணர்கிறீர்கள்? அதன் ஊக்கம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? அதன் பெரிய பலவீனமாக நீங்கள் கருதுவது எது?***

நிறைய வாசல்கள். நண்பர்களைத்தான் சொல்கிறேன். எது வேண்டுமானாலும் ஒரு போனில் தொடர்புகொண்டுவிடலாம் எனும் படியான நட்புகள். இதைப்பற்றியும் நண்பர்கள் பற்றியும் தனிப்பதிவாக எழுதவேண்டிய அளவிற்கு மிக முக்கியமான வாசல் அது.

நண்பர்கள் தவிர்த்துப்பார்த்தால்.. தமிழ் என்றால் நான்கு வார்த்தைகள், சங்கப்பாடல்களின் சுகம், வைரமுத்துக் கவிதைகள் என்பதையும் தாண்டி என்னவெல்லாமோ இருக்கிறது என்பதை அறியச்செய்யும் குருக்கள் நிறைய கிடைத்தது இங்கேதான். தினமும் ஒன்று புதிதாக கிடைக்கப்பெறுகிறது. ஜ்யோவ்ராம் சுந்தர் ஆரம்பத்தில் என்னிடம் காட்டிய அக்கறை மறக்க முடியாதது. அதன் பின் சிவராமன் எனக்கு அறிமுகப்படுத்திய புத்தகங்களும் அறிஞர்களும் நிறைய. ஆசான் ராஜசுந்தர்ராஜன் என பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

நேற்று கூட ரமேஷ் வைத்யா தொலைபேசியில் அழைத்து 'பதின்ம' என்றால் டீன் ஏஜ் விடலை வயதுக்குண்டான அனுபவங்கள், நீ என்னமோ அம்புலிமாமாத்தனமா எழுதி இருக்கியேடா ராஸ்கல் என கடிந்து கொண்டது அவ்வளவு முக்கியமான ஒன்று. ஒரு நெருடல் இருந்துகொண்டே இருந்தது எழுதும்பொழுது. இனி அந்தத்தவறை செய்ய வாய்ப்பில்லை அல்லவா. அதுபோலத்தான்.. நிறைய வழி நடத்துபவர்கள் வாசலில் நான் நின்றது இப்பதிவுலகின் மூலம்தான்.

வெகுஜன இதழ்களில் நம் படைப்புகளைப்பார்க்கும் பொழுது ஏற்படும் மகிழ்ச்சியை அவ்வளவு எளிதில் வெளிப்படுத்திவிடமுடியாது. அவ்வப்பொழுது இதழ்களில் படைப்புகள் வருகிறதென்றால், அந்த வாசலைப் பதிவுலகம் அன்றி வேறு எது திறந்து வைத்திருக்க முடியும்?

பலவீனம் என்று பார்த்தால், வேலை நிமித்தம் எல்லோருடைய பதிவுகளையும் படிக்க முடியவில்லை என்ற எண்ணம் ஒருபுறமும், நாம் தொடர்ந்து எழுதமுடியாமல் போகும் வேலைப்பளுவின் போது, பதிவுலகம் பற்றிய சிந்தனை ஓடுவதும் கொஞ்சம் பலவீனம் தான். இது ஒரு அடிக்ஷன் என்றால் மிகையல்ல.. இப்பொழுது கொஞ்சம் அதில் இருந்து மீண்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

**4. நாம் தயக்கத்தோடே மறுத்தாலும் ஆங்காங்கே நண்பர்களாக குழு மனப்பான்மையுடன் பதிவர்கள் செயல்படுகிறார்கள். அது குறித்து உங்கள் கருத்து என்ன?**

அதில் தவறொன்றுமில்லை. ஆனால் குழு என்ற ஒரே காரணத்திற்காக ஓட்டுகள் போடுவதும், கும்மி அடிப்பதும் முன்னேற்றம் தராது என்பதை விட முன்னேற்றத்தைத் தடுக்கும் என்பது சரியான வார்த்தைகளாகப் படுகிறது. அதாவது எந்த நஷ்டமும் இல்லை என்றாலும் கிடைக்கப்போகும் லாபம் தள்ளிப்போகும் என்கிறேன்

***5. நம் மரியாதைக்குரிய, பத்திரிகையுலகம் சார்ந்த மூத்த பதிவர்களின் அன்பைப் பெற்றவராக நீங்கள் இருக்கிறீர்கள். அவர்களின் வலைப்பூ சார்ந்த செயல்பாடுகள் உங்களுக்குத் திருப்தியளிக்கின்றனவா?***

அன்பைப் பெற்றது அவ்வளவு எளிதில் இல்லை ஆதி. ஜ்யோவ்.சுந்தராகட்டும், சிவராமன் ஆகட்டும், ரமேஸ்வைத்யா ஆகட்டும், சுகுணாவாகட்டும்., லக்கிலுக் ஆகட்டும்.. நான் ஆரம்பத்தில் இவர்களின் அனைத்துப்பதிவுகளையும், ஃப்ரொஃபைல் முதற்கொண்டு படித்து, அவர்களின் அரசியல், சமூக நிலைப்பாடுகள், எதில் யாருக்கு என்ன பார்வை போன்றவற்றை உள்வாங்கிக்கொண்டு, இவர்களிடம் ஏதாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கில் சந்தேகங்கள் கேட்டுத் தெளிந்து ..இப்படி வளர்ந்தது நட்பு. எல்லாமே இன்றுவரை மிகுந்த பிணைப்போடு இருக்கக் காரணமும் அதுவே.

புதிதாய் எழுத வருபவர்கள் எவரும் ஒரு வருடத்திற்கு முன்னர் எழுதிக் கொண்டிருப்பவர்களின் பார்வை, கருத்து, அரசியல் நிலைப்பாடு என எது குறித்தும் தெரிந்துகொள்ள விருப்பமோ, முயற்சியோ எதுவும் எடுப்பதில்லை என்பது என் தாழ்மையான கருத்து. போகிற போக்கில் எங்கள் பதிவுகளைப் படிப்பதில்லை, பின்னூட்டம் இடுவதில்லை என்று நிறைய பேர் 'குழும மடல்களிலும்' பதிவுகளிலும் எழுதுவதைப் பார்க்க நேரிடுகிறது. காரணம் இதுதான். ஏதோ ஒரு தயக்கம் அவர்களிடம். அதைவிட அதிகமாய் ஏதோ ஒரு வெறுப்பும் இருப்பதாகவே தெரிகிறது. இந்த இரண்டுமே


குசும்பன் நடிக்கும் 'எறா'
கோடைக் கொண்டாட்டம்
சேரிடம் சேராதவை
வேங்கை
பிரேக்ஃபாஸ்ட் வித் ரொமான்ஸ்
கொஞ்சம் டெக்னிகல் : TQM

► April (13)
► March (13)
► February (12)
► January (5)

► 2009 (198)
► 2008 (106)

**நான் பின்தொடரும் வலைப்பூக்கள்**

## Blogroll

தமிழ்மணம்
தமிழிஷ்
சங்கமம்
திரட்டி
தமிழ்வெளி
தமிழ்கணிமை

## Labels

உணர்வுகள் (17)
எப்படி? (10)
ஓவியம் (4)
கண்ணன் கதைகள் (5)
கவிதை (29)
காதல் (35)
குறும்படம் (10)
சிறுகதை (20)
டெக்னிகல் (12)
திருமணமாகாதவர்களுக்கான எச்சரிக்கை (45)
நானே சிந்திச்சேன் (5)
புகைப்படம் (12)
புலம்பல்கள் விருது (3)
விமர்சனம் (20)


## Visitors

00264668

## About Me



ஆதிமூலகிருஷ்ணன்

எனைப்பற்றிக்கூற யாதொன்றுமில்லை

என்னிடம் எனக்கு முன்னால் எழுதிக் கொண்டிருந்தவர்களின்பால் இருந்தது இல்லை.

அவர்களின் வலைப்பூ சார்ந்த செயல்பாடுகள் திருப்தி அளித்ததனால்தானே இவ்வளவு தொடர்பும் நட்பும்.. ஆனாலும் இப்பொழுதெல்லாம் ஜயோவ்ஜி உட்பட பலரும் BUZZசில் பயணிப்பது பதிவுலகம் டல்லடிக்க காரணம். குறிப்பாக எனக்கு இழப்பு. கருத்து கூறுவதே இல்லை எதற்கும்.

***6. பதிவர்களுக்கான அடுத்த கட்டம் பத்திரிகைகளில் எழுதத்துவங்குவதுதான் என நீங்கள் நம்புகிறீர்களா?***

அதுதானே உண்மையும் கூட. நீங்கள் நம்பவில்லையா.? பத்திரிகைகளில் வரவில்லை என்றால் பழம் புளிக்கும் தானே ஒழிய, ஆம்..நேர்மையாக பதில் சொல்வதென்றால்..பத்திரிகைகளில் படைப்புகள் வரவேண்டும் என்பதுதான் நோக்கம்.

***7. கொஞ்சம் மர்மமாகவே இருந்துகொண்டிருக்கும் வலைப்பூ வாசகர்கள் குறித்து.?***

மர்மம் என்று எதைச் சொல்கிறீர்கள் எனத் தெரியவில்லை. ஒரு மர்மமும் இல்லை. தொடர்ந்து சரியாக எழுதவில்லை என்றால், படிப்பதை நிறுத்திவிடுவார்கள். ஹிட்லிஸ்ட்டைப் பார்த்தால் தெரியும். அதைப்போலவே, கொஞ்சம் பிரச்சனைபோன்ற ஏதேனும் ஒன்றை எழுதிவிட்டால், அவ்வளவு நலம் விரும்பும் மடல்கள் வருவது வலைப்பூ வாசகர்களிடம் இருந்து தான். (பதிவர்கள் நேரடியாகக் கேட்டுவிடுவது என்பது வேறு). வலைப்பூ வாசகர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள் ஆதி. எங்கு சென்றாலும் எவரேனும் ஸ்நேகமாய் புன்னகைத்து ‘நீங்கதானே’ எனக் கேட்கப்படும்பொழுது ஒரு பரவசம் இருக்கத்தான் செய்கிறது. சமீபத்திய பரவசம், பள்ளி அட்மிசனுக்கு நின்றுகொண்டிருந்த பொழுது அடையாளம் கண்ட காசாளர் வந்து சிரித்துப்பேசி வேலையை முடித்துக்கொடுத்தது. தொடர்ந்து வாசிப்பாராம் (பெண்!). அருகில் வீட்டம்மா இருந்தபொழுது இப்படி ஒரு நிகழ்வு நடந்ததால் அன்று மதியம் நல்ல சாப்பாடு.

***8. வலையுலகில் பெண் பதிவர்களின் பங்கு குறித்த உங்கள் கருத்து.?***

ம். “போங்கடா நீங்களும் உங்க ஆண்மையும்” என்று தலைப்பு வைத்து எழுதும் அளவிற்கு சுதந்திரமாகவும்,அன்றாடங்களை மிகுந்த நகைச்சுவையுணர்வோடு வெளிப்படுத்தும் பதிவுகளாகவும் மிகச் சிறப்பாக செயல்படுகிறார்கள் (ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு ஆண்பதிவர் “போங்கடி நீங்களும் உங்க பெண்ணியமும்” என்று எழுதிவிட முடியாது..நான் உட்பட, காவலர்கள் எதிரடி பின்னிவிடுவார்கள்/வோம். அந்தப் பதிவைப் பொறுத்தவரையில் கருத்தில் எனக்கு கருத்து வேறுபாடு கிடையாது. மிக நல்ல கருத்துகளை ஆணித்தரமாக முன்வைத்த பதிவு அது.)

மேலும் பெண்பதிவர்கள் என்று பிரித்துப்பார்ப்பது தேவையற்றது
என்று நினைக்கிறேன். இங்கே கருத்துகளும், படைப்புகளும் மட்டுமே முக்கியம்.
.

***9. உள்நோக்கத்துடனோ அல்லது உணராமலோ பதிவின் நோக்கத்தைத் திசைதிருப்புவதாக அமையும் பின்னூட்டங்களை எவ்வாறு எதிர் கொள்கிறீர்கள்.?***

ஒரு புன்னகை..ரொம்ப கோவம் வந்தால் இருக்கவே இருக்கிறது..”உங்கள் ஆழ்ந்த கருத்தும் வாசிப்பனுபவமும் பிரமிப்பாக இருக்கிறது..உங்கள் கருத்தோடு உடன்படுகிறேன்”

***10. உங்கள் படைப்புகளுக்கான விஷயங்கள் எப்படியான அக, புறச் சூழல்களில் உருவாகின்றன?***

என்னுடைய சமீபத்திய கவிதை அல்லது கவிதை போன்ற ஒன்றில் குறிப்பிட்டது போல என் கட்டுரையோ கவிதையோ ஒரு வார்த்தையில் தான் விடிகிறது. ஏதேனும் ஒரு வார்த்தையில் ஆரம்பிக்கிறது படிமம். பின் தன்னைத் தானே எழுதிக்கொள்கிறது என்மூலம். (ஓவரா இருந்தா ஸாரி)

***11. மிகுந்த சொற்பிழைகளோடு எழுதிக்கொண்டிருக்கும் / அல்லது மிகுந்த அலட்சியமாக எழுதிக்கொண்டிருக்கும் பதிவர்கள் பற்றிய உங்கள் கருத்து?***

என் பதிவுகளைச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.. சொற்பிழை தட்டச்சு நிமித்தம் பெரும்பாலும் ஏற்படுகிறது. ஆனால் உயிர் எழுத்துகளுக்கு முன் ஒரு போடுவது போன்ற அபத்தங்களும் ‘ன்’ விகுதிகளை விட்டு விளாசுவதும், நாங்கள் நால்வரும் போனேன் என்று எழுதுவதும் அடுத்தடுத்த வரிகளை படிக்க விடாமல் செய்துவிடுகிறது.

கேவிஆர் ராஜா போன்ற பதிவர்கள் இலக்கணம் குறித்து நிறைய எழுதி இருக்கிறார்கள். அது போன்ற பதிவுகள் இலக்கணப்பிழைகளை தவிர்க்க உதவும்.

***12. நீங்கள் கண்டவரை தமிழ்ப் பதிவுலகத்தின் பயணம் எப்படி இருக்கிறது? ஆரோக்கியமான பாதையில்தான் செல்கிறதா?***

ஆரோக்கியம் என்பது அவரவர் பார்வை பொறுத்தது. அரசியல் ஆரோக்கியமாக இருக்கிறதா என்பதற்கு என்ன பதில் சொல்வீர்கள்.? ஒரு சாரருக்கு ஆரோக்கியம்.. பலருக்கு அயோக்கியத்தனமாகப்படும். அதுபோலத்தான் இதுவும். இதில் முனைப்போடு செயல்படுபவர்கள் ஒருபக்கம். டைம் பாஸ் மறுபக்கம். இரண்டுமே நன்றாகத்தான் போய்க்கொண்டிருக்கின்றன எனும் பொழுது, ஆரோக்கியமாகத்தான் இருக்கிறது என்று அர்த்தம்.

VIEW MY COMPLETE PROFILE

## Step nee

Vis. today 3
Visits 177,859
Pag. today 5
Pages 265,175
Histats.com



ஹை -எண்ட் கம்ப்யூட்டர் கேம்ஸ் பிரியர்கள் தொடர்பு கொள்ளவும். உங்களுடன் நட்பு கொள்ள விரும்புகிறேன்.
thaamiraa@gmail.com

***13. இந்தப்பேட்டியில் நீங்கள் தொடர்ந்து ரசித்துப்படிக்கும் பதிவர்கள் யாரையாவது குறிப்பிட்டு ஊக்குவிக்க விரும்புகிறீர்களா? அவர்கள் யாரார்.?***

நிறைய இருக்கிறார்கள். உடனே நினைவுக்கு வருவது பதிவர் ஜெனோவாவின் கவிதைகள். தனியாக மற்றவர்கள் பற்றி எனது என்'ணங்களில் பகிர்கிறேன்.

***14. நான் கேட்க விட்டுப்போன / நீங்கள் பகிர விரும்பும் செய்திகள் ஏதேனும்.?***

சாப்பாட்டுக்கு பில் நீங்க கொடுப்பீர்களா..?

www.narsim.in

.

தமிழிஷ் 34 Vote

Labels: An Interview with Narsim , பதிவர்

## 55 COMMENTS:

முகிலன் May 26, 2010 8:04 PM

ஆஆஆஆஆஆதீஈஈஈஈஈ

நான் நட்சத்திர வாரத்தில் செய்யலாம் என்று நினைத்திருந்த ஒரு பதிவு இது. எனக்கு முந்திக்கொண்டதற்காகத் திட்டுவதா இல்லை நல்ல ஒரு பகிர்வைத் தந்ததற்காகப் பாராட்டுவதா என்று தெரியவில்லை.

shortfilmindia.com May 26, 2010 8:07 PM

ஹலோ.. மைக்டெஸ்டிங்.. 1..2...3...

கேபிள் சங்கர்

பிள்ளையாண்டான் May 26, 2010 8:10 PM

நல்ல பதிவு..

ஆழ்ந்த கருத்துக்கள், அர்த்தமுள்ள கேள்விகள்

நன்றி ஆதி!!

டிஸ்கி : போட்டோ பார்த்ததும், ஹீரோவாத் தான் நடிக்கப் போவார்னு நினைச்சேன், பதில்களைப் பார்க்கும் போது, கட்சி ஆரம்பிச்சு அறிக்கைக் கூட விடுவார் போல்ருக்கு.

♫♪..♥ .பனித்துளி சங்கர் .♥..♪♫ May 26, 2010 8:12 PM

பதிவுலகம் பற்றி பல தகவல்கள் அறிந்து கொண்டேன் . பகிர்வுக்கு நன்றி

வால்பையன் May 26, 2010 8:14 PM

அண்ணாரின் முதிர்ச்சி நான் இன்னும் புட்டிப்பால் லெவல் தான் என்பதை உணர்த்துகிறது!

sriram May 26, 2010 8:14 PM

எனக்கு உங்க பேட்டி வேணுமே.. எப்போ அப்பாயின்மெண்ட் தருவீங்க??

என்றும் அன்புடன்
பாஸ்டன் ஸ்ரீராம்

குசும்பன் May 26, 2010 8:17 PM

ஆமா நர்சிம் பேட்டின்னு புலன்விசாரனை விசயகாந்த் போட்டோவை போட்டு இருக்கீங்க? நர்சிம் போட்டோ இல்லையா?

துளசி கோபால் May 26, 2010 8:20 PM

அருமை.

ஒரே நிமிசப்பேச்சில் நம்ம கோபாலை, 'நீங்க மதுரைக்காரரா?'ன்னு கண்டு பிடிச்சுட்டார்.

//உங்கள் ஆழ்ந்த கருத்தும் வாசிப்பனுபவமும் பிரமிப்பாக இருக்கிறது..உங்கள் கருத்தோடு

உடன்படுகிறேன்"//

இது பிடிச்சிருக்கு .....:-))))))

---

குசும்பன் May 26, 2010 8:21 PM

*This post has been removed by the author.*

---

குசும்பன் May 26, 2010 8:26 PM

//கும்மி அடிப்பதும் முன்னேற்றம் தராது என்பதை விட முன்னேற்றத்தைத் தடுக்கும் //

ஆதி இனி உங்க முன்னேற்றத்துக்கு தடையா இருக்கமாட்டேன், நாளபின்னமறுநாள் நீ பாட்டுக்கு குசும்பன் என் பதிவில் கும்மி அடிச்சதால் தான் என்னால் ஒயிட் ஹவுஸ் புக்கு அட்டைபடத்தில் இடம் பிடிக்காமல் போனது என்று சொல்லிட்டின்னா?:(( எதுக்குய்யா வம்பு! நான் ஒதுங்கிக்கிறேன்.

பி.கு: ஒயிட் ஹவுஸ் புக்குன்னா என்னான்னு தெரியாதவங்க கூகுள் செஞ்சு பார்த்துக்குங்க

---

ஆதிமூலகிருஷ்ணன் May 26, 2010 8:48 PM

நன்றி மேவீ! (எடிடிங் பண்ணி திரும்பவும் போஸ்ட் பண்ணியதில் உங்கள் பின்னூட்டத்தைக் காக்கா தூக்கிப்போய்விட்டது)

நன்றி முகிலன்.! (நான் எத்தனை வடைகளை மிஸ் செய்திருப்பேன், நல்லா வேணும்)

நன்றி கேபிள்.!
நன்றி பிள்ளையாண்டான்.!
நன்றி பனித்துளி.!
நன்றி வால்பையன்.!
நன்றி ஸ்ரீராம்.!

நன்றி குசும்பன்.! (நீங்க கும்மி அடிச்சாலும் இல்லைன்னாலும் அந்த புக்கில் நான் இடம் பெறுவதை யாராலும் தடுக்கமுடியாது)

நன்றி துளசிமேடம்.!

---

குசும்பன் May 26, 2010 8:49 PM

//சாப்பாட்டுக்கு பில் நீங்க கொடுப்பீர்களா..?//
இப்படி ஒரு ஒத்த கேள்வி கேட்டு பேட்டிய பாதியோட நிறுத்தவெச்சிட்டீங்களே:)))

---

குசும்பன் May 26, 2010 8:51 PM

//நீங்க கும்மி அடிச்சாலும் இல்லைன்னாலும் அந்த புக்கில் நான் இடம் பெறுவதை யாராலும் தடுக்கமுடியாது)
//

யோவ்வ்வ்வ் அவ்வ்வ்வ் தங்கமணிக்கு இது மட்டும் தெரிஞ்சுது, மகனே உனக்கு சங்குதான்:)) கூகிள் செய்யாம சொல்லிட்ட போல:)))

---

ILA(@)இளா May 26, 2010 8:54 PM

/சாப்பாட்டுக்கு பில் நீங்க கொடுப்பீர்களா/
இங்க கேள்விக்கு அப்புறம் ஆதி எஸ்ஸாக்ருப்பாரே, எவ்ளோ பில் கட்டுனீங்க நர்சிம்

---

ஈரோடு கதிர் May 26, 2010 9:46 PM

பல பதில்கள் மனசுக்குள் இருந்ததை உருவிப் போட்டது போல் உணர்ந்தேன்...

நன்றி ஆதி / நர்சிம்

---

ஜில்தண்ணி May 26, 2010 9:48 PM

மிக்க நன்றி ஆதி சார்

நர்சிம் போன்ற பிரபல பதிவரின் எண்ணங்களை என் போன்ற இளையவர்களுக்கு தெரிய ஒரு வழியாக இருந்தது பதிவு

\\ புதிதாய் எழுத வருபவர்கள் எவரும் ஒரு வருடத்திற்கு முன்னர் எழுதிக் கொண்டிருப்பவர்களின் பார்வை, கருத்து, அரசியல் நிலைப்பாடு என எது குறித்தும் தெரிந்துகொள்ள விருப்பமோ, முயற்சியோ எதுவும் எடுப்பதில்லை என்பது என் தாழ்மையான கருத்து. போகிற போக்கில் எங்கள் பதிவுகளைப் படிப்பதில்லை \\

உண்மை தான்,படிக்க ஆரம்பித்து விடுகிறேன்

---

ஜெனோவா May 26, 2010 9:52 PM

அன்புள்ள நர்சிம், ஆதி,

உங்களைப் போன்றோர்களின் வழிகாட்டுதலும் , ஊக்கமும் இன்னும் நிறைய எழுத தூண்டுகின்றன.

ஆயிரம் நன்றிகள்!!

---

குமக்கி May 26, 2010 10:12 PM

நல்ல சாப்பாடு கிடைக்கும் பட்சத்தில் எழுதலாம்னு சொல்றீங்க...ம்...ம்.

ஒரு விஷயம் நர்சிம்.

சில பதிவுகளில் எல்லோருக்கும் பதில் சொலவது...சில பதிவுகளில் சர்சைக்கிடமான கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்வது..சில பதிவுகளில் ஒட்டு மொத்த நன்றி....இதை தவிர்த்து பின்னூட்டங்களை பொறுத்தவரை ஒரே மாதிரியான நிலைப்பாடு எடுப்பது நல்லது.. நானும் ரொம்ப நாளா கூவிகிட்டிருக்கேன்...கவனிங்க.

மற்றபடி பேட்டியில் கேட்கப்பட்ட கேள்விகளும் அளிக்கப்பட்ட பதில்களும் ஒரு தேர்ந்த பதிவர்கள் என்பதை நிரூபிக்கும் விதத்தில் அற்புதமாக வந்திருக்கிறது..

ஆனாலும் அந்த கடைசி பதில்தான் எனக்கு பிடிச்சிருக்கு.

:))

---

மணிஜீ...... May 26, 2010 10:12 PM

//ஜயோவ்ராம் சுந்தர் ஆரம்பத்தில் என்னிடம் காட்டிய அக்கறை மறக்க முடியாதது.///

அப்படின்னா இப்ப இல்லைன்னு சொல்றீங்களா?(நம்மால "முடிஞ்சது")

---

புருனோ Bruno May 26, 2010 10:13 PM

//மிகுந்த சொற்பிழைகளோடு எழுதிக்கொண்டிருக்கும் பதிவர்கள் பற்றிய உங்கள் கருத்து?//

திருந்த முயற்சிக்கிறேன் ஆதி சார்

அது சரி, என் பதிவில் சொற்குற்றம் தானே கண்டீர், பொருட்குற்றம் அல்லவே :) :)

---

மயில் May 26, 2010 10:44 PM

(பதிவுலக)அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா :))

---

சுரேகா.. May 26, 2010 10:45 PM

ஸ்கூல் அட்மிஷன் மேட்டர் சூப்பர் நர்சிம் ஜி!

நல்ல, நேர்மையான பதில்கள்!

ஆதி....பின்றீங்களே!!

---

அனாமிகா துவாரகன் May 26, 2010 11:58 PM

வாவ். அருமை. பேட்டிகள் படிப்பது என்றால் எனக்கு ஒரே தயக்கமாக இருக்கும். ரொம்ப சீரியசாக பேசுவார்கள் என்று. இது இரண்டு நண்பர்கள் கஷூவலாக பேசுவது போல ஆனால் முக்கிய விடயங்களை உள்டக்கி இருக்கிறது.

(கடைசி பதில் கிளாஸ்)

---

மதார் May 27, 2010 12:24 AM

//நாம் தயக்கத்தோடே மறுத்தாலும் ஆங்காங்கே நண்பர்களாக குழு மனப்பான்மையுடன் பதிவர்கள் செயல்படுகிறார்கள். அது குறித்து உங்கள் கருத்து என்ன?

அதில் தவறொன்றுமில்லை. ஆனால் குழு என்ற ஒரே காரணத்திற்காக ஓட்டுகள் போடுவதும், கும்மி அடிப்பதும் முன்னேற்றம் தராது என்பதை விட முன்னேற்றத்தைத் தடுக்கும் என்பது சரியான வார்த்தைகளாகப் படுகிறது. அதாவது எந்த நஷ்டமும் இல்லை என்றாலும் கிடைக்கப்போகும் லாபம் தள்ளிப்போகும் என்கிறேன்//

இந்த குழு ஓட்டு பத்தி முன்னம் நான் எழுதித்தான் நாலு நாள் சண்டை நடந்தது , மறுபடியுமா ?

//உள்நோக்கத்துடனோ அல்லது உணராமலோ பதிவின் நோக்கத்தைத் திசைதிருப்புவதாக அமையும் பின்னூட்டங்களை எவ்வாறு எதிர் கொள்கிறீர்கள்.?

ஒரு புன்னகை..ரொம்ப கோவம் வந்தால் இருக்கவே இருக்கிறது.."உங்கள் ஆழ்ந்த கருத்தும் வாசிப்பனுபவமும் பிரமிப்பாக இருக்கிறது..உங்கள் கருத்தோடு உடன்படுகிறேன்"//

இது தெரியாமப் போச்சே , ஒருத்தர கோவத்துல கொஞ்சம் திட்டிட்டேன் அப்புறமா பீல் பண்ணேன் . என்ன பண்ண அந்த நேரத்துல அந்த பிரச்சனையை முடிக்க வேறு வழி தெரியல , ஆனா சென்னையில் கொஞ்ச நாள் முன்னாடி அவரை பார்த்தேன் ஆனா அவருக்கு என்னை தெரியாது , பிரச்னை மட்டும் வராமல் இருந்திருந்தால் பேசிருப்பேன் .

---

பா.ராஜாராம் May 27, 2010 12:24 AM

// சமீபத்திய பரவசம், பள்ளி அட்மிசனுக்கு நின்றுகொண்டிருந்த பொழுது அடையாளம் கண்ட காசாளர் வந்து சிரித்துப்பேசி வேலையை முடித்துக்கொடுத்தது. தொடர்ந்து வாசிப்பாராம் (பெண்!). அருகில் வீட்டம்மா இருந்தபொழுது இப்படி ஒரு நிகழ்வு நடந்ததால் அன்று மதியம்

நல்ல சாப்பாடு.//

:-))

//மேலும் பெண்பதிவர்கள் என்று பிரித்துப்பார்ப்பது தேவையற்றது
என்று நினைக்கிறேன். இங்கே கருத்துகளும், படைப்புகளும் மட்டுமே முக்கியம்.//

nice.

//14. நான் கேட்க விட்டுப்போன / நீங்கள் பகிர விரும்பும் செய்திகள் ஏதேனும்.?

சாப்பாட்டுக்கு பில் நீங்க கொடுப்பீர்களா..?//

//ஜ்யோவ்ராம் சுந்தர் ஆரம்பத்தில் என்னிடம் காட்டிய அக்கறை மறக்க முடியாதது.///

//அப்படின்னா இப்ப இல்லைன்னு சொல்றீங்களா?(நம்மால "முடிஞ்சது")//

"முடிஞ்சது"

:-))))

ஜெனோவா! YES!!!

.

---

Mahi_Granny May 27, 2010 1:05 AM

"உங்கள் ஆழ்ந்த கருத்தும் வாசிப்பனுபவமும் பிரமிப்பாக இருக்கிறது..உங்கள் கருத்தோடு உடன்படுகிறேன்"இது நிஜமாவே (very truly) நர்சிம்க்கு நான் கொடுக்கும் comment. . கேள்விகளும் really commanding .pakirthalukku thanks

---

வி.பாலகுமார் May 27, 2010 1:10 AM

its nice narsim, thanks aadhi.

---

வானம்பாடிகள் May 27, 2010 1:18 AM

இங்க பாராட்டுறதுல சரிபாதி நர்சிம்முக்கு குடுத்துறணும். :ஃபோன் பண்ணி கேப்பேன்:))

---

பிள்ளையாண்டான் May 27, 2010 1:19 AM

முதல்ல ஒரு போட்டொ இருந்துச்சு.. கொஞ்ச நேரத்திலே, போட்டொவை மாத்திபுட்டீங்களே ஆதி...!!

---

எட்வின் May 27, 2010 1:46 AM

நன்றிங்க,
பதிவுலகம் குறித்து பல விஷயங்கள் அறிய முடிந்தது. நானும் இரண்டு வருசமா கிறுக்கிட்டு தான் இருக்கேன். எனக்கு குழுக்கள் குறித்து கொஞ்சமும் அறிவில்லை.

---

www.thalaivan.com May 27, 2010 3:02 AM

வணக்கம்
நண்பர்களே

உங்கள் திறமைகளை உலகுக்கு அறியச் செய்யும் ஒரு அரிய தளமாக எம் தலைவன் தளம் உங்களுக்கு அமையும்.

உங்கள் தளத்தில் நீங்கள் பிரசுரிக்கும் சிறந்த ஆக்கங்களை எமது தளத்தில் இடுகை செய்வதன் மூலம் உங்கள் ஆக்கங்களை அதிகமான பார்வையாளர்கள் பார்ப்பதற்கு வாய்ப்பளிப்பதுடன் உங்கள் தளத்திற்கு அதிக வருகையாளர்களையும் பெற்றுத் தரும்.
நன்றி
தலைவன் குழுமம்

www.thalaivan.com

---

~~Romeo~~ May 27, 2010 7:54 AM

வித்தியாசமான பதிவு .. அருமையான கேள்வி மற்றும் பதில் .

---

நாய்க்குட்டி மனசு May 27, 2010 8:21 AM

அழகான கேள்விகள், அதைவிட அழகான பதில்கள்.
ஆனா என்ன, ஒரு நிமிடம் ஹீரோ மாதிரி இருந்தார் போட்டோ வில்
கண்ணை மூடித் திறக்கிறதுக்குள்ள வில்லனா மாறிப் போனாரே அதுவும் போட்டோ வில தான்.
என்ன கொடும சரவணா?

---

அறிவிலி May 27, 2010 8:44 AM

சாப்பாட்டுக்கு பில் பணம் யார் குடுத்தது?

தராசு May 27, 2010 9:11 AM

முதல்ல ஆதிக்கு நன்றி, வாழ்த்துக்கள், கேள்விகளில் பின்னி பெடலெடுக்கறீங்க தல.

இரண்டாவது சுவராஸ்யமாகவும், கருத்துச் செறிவுடனும் பதில் சொன்ன நர்சிம்முக்கு நன்றி.

ஒரு கேள்வி ://புதிதாய் எழுத வருபவர்கள் எவரும் ஒரு வருடத்திற்கு முன்னர் எழுதிக் கொண்டிருப்பவர்களின் பார்வை, கருத்து, அரசியல் நிலைப்பாடு என எது குறித்தும் தெரிந்துகொள்ள விருப்பமோ, முயற்சியோ எதுவும் எடுப்பதில்லை என்பது என் தாழ்மையான கருத்து.//

இதில் அரசியல் நிலைப்பாடு என்பது எழுத்துத் திறமையை எந்த அளவுக்கு நிர்ணயிக்கிறது நர்சிம்? அரசியலுக்கும் எழுத்தார்வத்துக்கும் என்ன சம்பந்தம்?

மோகன் குமார் May 27, 2010 10:21 AM

கொஞ்ச நாளாவே பின்னூட்டங்கள் பொதுவா நிறைய பதிவில் குறைவு. ஆனா இந்த பதிவுக்கு எவ்வளவு பின்னூட்டம்!! நரசிம் மகிமை!!

400-க்கு வாழ்த்துக்கள் (அது நான்தான் )

காவேரி கணேஷ் May 27, 2010 10:39 AM

நல்ல பேட்டி..

தொடர்ந்து இந்த மாதிரி மதிய வேலையில் பேட்டி எடுங்கள்..

Vidhoosh(விதூஷ்) May 27, 2010 10:40 AM

//மேலும் பெண்பதிவர்கள் என்று பிரித்துப்பார்ப்பது தேவையற்றது
என்று நினைக்கிறேன். இங்கே கருத்துகளும், படைப்புகளும் மட்டுமே முக்கியம்.//

நல்ல கருத்து.

வாழ்த்துக்கள் ஆதி/நர்சிம் :)

அதிஷா May 27, 2010 11:21 AM

நல்ல கருத்துகள் நன்றி நர்சிம்

(இங்கே நான் அந்த தில்லானா மோகனாம்பாள் டயலாக் சொல்லலாமா ஆதி டியர்)

தமிழ் அமுதன் (ஜீவன்) May 27, 2010 11:30 AM

நல்ல கேள்விகள்-நல்ல பதில்கள்

வலையுலகம் பற்றிய இரண்டு சீனியர் பதிவர்களின் அலசல் பல விசயங்களை
புரிய வைத்தது ...!

Phantom Paruppu May 27, 2010 11:50 AM

ஆனால் குழு என்ற ஒரே காரணத்திற்காக ஓட்டுகள் போடுவதும், கும்மி அடிப்பதும் முன்னேற்றம் தராது என்பதை விட முன்னேற்றத்தைத் தடுக்கும் என்பது சரியான வார்த்தைகளாகப் படுகிறது. அதாவது எந்த நஷ்டமும் இல்லை என்றாலும் கிடைக்கப்போகும் லாபம் தள்ளிப்போகும் என்கிறேன்
///////////////////////////

மிகச் சரியான வார்த்தை. நான் பதிவுலகத்துக்கு புதியவன், சில நாட்கள் முன்பு என் கண் முன்னே நடந்த சம்பவம் தமிளிஷ் ல் , கடுப்பு தாங்க முடியாம ஒரு பதிவே போட்டேன். இது அந்தப் பதிவின் லிங்க

http://cute-paruppu.blogspot.com/2010/05/blog-post_19.html

நர்சிம் May 27, 2010 12:22 PM

முகிலன்.. அதனால என்ன பாஸ்..வேற கேள்வி கேளுங்க..விடக்கூடாது.

பிள்ளையாண்டான்..அரசியலா புரியலயே பாஸ்.

நன்றி வால்பையன்.

ஸ்ரீராம் கால் பண்ணுங்க இன்னிக்கு நைட்டு. மெயில் பண்ணி இருக்கேன்.

குசும்பா..இன்னொரு போட்டோ அனுப்புனா..அத பப்ளிஸ் பண்ணமாட்டாராம்..ஏன்னு தெரியல..;(

மதுரைக்குன்னு சில வார்த்தைகள் இருக்கு டீச்சர் அதான். அப்புறம் ரொம்ப
நல்லவங்க..பார்த்தவுடனே தெரிஞ்சுடும். :)

கும்க்கி.. புரியல நண்பா..மெயில் பண்ணுங்கன்னா உதவியா இருக்கும்.

@தண்டோரா.. நானே அதைத்தானே சொல்லி இருக்கேன்..இப்பல்லாம் பஸ் பக்கமே இருக்காரு குருஜின்னு.

// இது தெரியாமப் போச்சே , ஒருத்தர கோவத்துல கொஞ்சம் திட்டிட்டேன் அப்புறமா பீல் பண்ணேன் . என்ன பண்ண அந்த நேரத்துல அந்த பிரச்சனையை முடிக்க வேறு வழி தெரியல , ஆனா சென்னையில் கொஞ்ச நாள் முன்னாடி அவரை பார்த்தேன் ஆனா அவருக்கு என்னை தெரியாது , பிரச்னை மட்டும் வராமல் இருந்திருந்தால் பேசிருப்பேன்//

இது என்னங்க கொடுமை.. பிளாக் சண்டையால பேசாம இருப்பீங்களா? ரைட்டு

/ இதில் அரசியல் நிலைப்பாடு என்பது எழுத்துத் திறமையை எந்த அளவுக்கு நிர்ணயிக்கிறது நர்சிம்? அரசியலுக்கும் எழுத்தார்வத்துக்கும் என்ன சம்பந்தம்?//

தராசு..எழுத்திற்கு சம்பந்தம் இல்லை.ஆனால் அவர்களோடான நட்பை தொடர அவர்களின் அடிப்படை தெரிந்து அதன் பொருட்டு விவாதம் தொடர்ந்தால் நன்றாக இருக்கும். அதைவிடுத்து லக்கியிடம் போய் ஜெயலலிதாவ விடவா ஒரு அரசியல்வாதி திறமையானவங்க என விதண்டவாதம் பேசுவதால் நட்பும் வளராது, வாதமும் விதண்டம்தான்.

நன்றி மோகன்

அதிஷா.. நான் ஆதிகிட்ட மொதல்லயே அதிஷா இப்பிடி பின்னூட்டம் போடுவாறேய்யா என்ன பண்ணப்போறன்னு கேட்டேன்.. ;)

அனைவருக்கும் நன்றி.. ஆதி, நன்றி & 400க்கு வாழ்த்துகள்.

(யோவ்..நான் அனுப்புன ஃபோட்டோவ போடுய்யா.. ஹும்ம்ம்..சரி பரவாயில்லை விடுங்க)

---

அறிவன்#11802717200764379909 May 27, 2010 1:40 PM

||ஒரு புன்னகை..ரொம்ப கோவம் வந்தால் இருக்கவே இருக்கிறது.."உங்கள் ஆழ்ந்த கருத்தும் வாசிப்பனுபவமும் பிரமிப்பாக இருக்கிறது..உங்கள் கருத்தோடு உடன்படுகிறேன்||

இப்பதானே இந்த ரகசியத்தை வெளிய சொல்லியிருக்காரு...இனிமே இருக்குது பாருங்க.. நாங்கூட ரொம்ப நல்லவருன்னு நெனச்சேனே..
:))

உண்மையில் நல்ல ஒரு நண்பர்;மேலும் உயரங்களுக்குச் செல்வார் என்று நினைக்கிறேன்..நன்றி.பதிவுக்கு!

---

கார்க்கி May 27, 2010 1:51 PM

//(ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு ஆண்பதிவர் "போங்கடி நீங்களும் உங்க பெண்ணியமும்" என்று எழுதிவிட முடியாது..நான் உட்பட, காவலர்கள் எதிரடி பின்னிவிடுவார்கள்/வோம்//

இது உங்க ஏரியா தல.. ஜமாய்ங்க :)

---

விக்னேஷ்வரி May 27, 2010 5:34 PM

நர்சிம்மின் பார்வையும், தெளிவும், உண்மையுமே அவர் இன்றிருக்கும் இடத்திற்கு காரணம்.
நன்றி ஆதி.

---

Mahesh May 27, 2010 7:21 PM

சரியான பேட்டி, சரியான நபரிடமிருந்து சரியான பேட்டியாளரால்.

அருமை !!!

---

நாடோடி இலக்கியன் May 27, 2010 9:04 PM

எடுத்தவரும்,கொடுத்தவரும் பதிவுலகில் என் ஆதர்ஷங்கள் என்பதால் ரொம்ப சந்தோஷமா படிச்சேன்.

சூப்பர்.

---

Uma May 27, 2010 9:34 PM

சுவாரசியமாக இருந்தது. பகிர்விற்கு நன்றி.

---

ஆதிமூலகிருஷ்ணன் May 27, 2010 10:51 PM

நன்றி இளா.!
நன்றி கதிர்.!
நன்றி ஜில்.!
நன்றி ஜெனோவா.!

நன்றி கும்க்கி.! (யோவ்.. டைமிருந்தா நீளமாவோ, சுருக்கமாவோ, பதில் சொல்லாமலோ போறதுதான். இதுல என்னய்யா பிரச்சினை?)

நன்றி மணிஜி.!

நன்றி புரூனோ.! (சார்.. என்னுதிது?)

நன்றி மயில்.!
நன்றி அனாமிகா.!
நன்றி சுரேகா.!

நன்றி மதார்.!
நன்றி பாராஜி.!
நன்றி மஹி.!
நன்றி பாலகுமார்.!

நன்றி வானம்பாடிகள்.! (குடுத்தாச்சு, குடுத்தாச்சு)

நன்றி பிள்ளையண்டான்.!
நன்றி எட்வின்.!
நன்றி ரோமியோ.!

நன்றி நாய்க்குட்டி.! (அது அவர் சாய்ஸுங்க.. முதல்ல போட்டது புடிக்கலயாம்.. என்னா ரசனையோ? ஹும்! :-))

நன்றி அறிவிலி.!
நன்றி தராசு.!
நன்றி மோகன்.!
நன்றி காவேரி.!
நன்றி விதூஷ்.!

நன்றி அதிஷா.! (செமையா இருந்துருக்கும். போடா போங்கு!)

நன்றி ஜீவன்.! (சீனியரா? யோவ்..)

நன்றி பருப்பு.!
நன்றி நர்சிம்.!
நன்றி அறிவன்.!
நன்றி கார்க்கி.!
நன்றி விக்னேஷ்வரி.!
நன்றி மகேஷ்.!

நன்றி இலக்கியன்.! (ஆதர்சமா? அது எவ்ளோ பெரிய வார்த்தை! யாராவது பெரியவங்க பார்த்தா சிரிக்குறதுக்குதானே இதெல்லாம். ஏதாவ்து சொல்விறப்போறேன். ஓடிப்போயிடும் சொல்லிட்டேன்)

நன்றி உமா.!

---

தமிழ் அமுதன் (ஜீவன்) May 27, 2010 11:00 PM

நன்றி ஜீவன்.!

/// (சீனியரா? யோவ்..)///

ஹா..ஹா பார்த்தீங்களா..! சீனியர்னு
நிரூபிச்சுட்டீங்க ...!;;)

---

ஆதிமூலகிருஷ்ணன் May 27, 2010 11:01 PM

@பிள்ளையாண்டான், ஜில்தண்ணி, நாய்க்குட்டி மனசு, பேண்டம் பருப்பு

அன்பு நண்பர்களே, அறிவுரைக்கு மன்னிக்கவும். சொந்தப்பெயரில் எழுத விருப்பமில்லை எனில் தமிழில் அழகுப்பெயர்களுக்கா பஞ்சம்? நல்ல பெயர்களை புனைப்பெயர்களாக சூடிக்கொள்ளுங்கள். பின்னாளில் எழுதி சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் பெரிதாக இல்லை எனினும் உள்ளுவது உயர்வுள்ளலாக கருத்துக் கூறுவதற்காகவாவது நல்ல பெயரைச் சூடிக்கொள்ளலாம். பின்னர் நீங்களே விரும்பினாலும் கூட யாரென அறிமுகப்படுத்திக்கொள்ளவும், புதிய பெயரை அறியச்செய்வதும் சிரமமாக இருக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக முதல் இம்ப்ரெஷனே உங்கள் பெயரால்தான் உருவாகிறது. அது வலுவில்லாமல் போகும் போது உங்கள் கருத்துக்களும் வலுவற்றுப் போய்விடும்.

உரிமையோடு சொல்லப்பட்ட இந்தக்கருத்துகளை பாஸிடிவாக எடுத்துக்கொள்ளுங்கள் நண்பர்களே.. இருப்பினும் உங்கள் பெயர்களுக்கு சரியான சொந்தக்காரணங்கள் இருப்பின் அதை மதிக்கிறேன். நன்றி.!

---

ஜில்தண்ணி May 27, 2010 11:27 PM

அறிவுரைக்கு நன்றி ஆதி சார்

நம்ம சுடுதண்ணி அய்யாவோட தீவிர விசிறி நான் அதனாலத்தான் ஜில்தண்ணின்னு வைத்தேன்

மாற்ற முயற்சி செய்கிறேன்

---

நாடோடி இலக்கியன் May 28, 2010 9:33 AM

யோவ் அதான் தெளிவாச் சொல்லியிருக்கோம்ல பதிவுலகில்னு. அப்புறம் இன்னொன்னு எனக்கு இன்னும் நல்லா எழுதனும் என்ற எண்ணத்தை உண்டாக்கிக்கொண்டே இருக்கும் பதிவுகளில் உங்கள் இருவரின் பதிவுகளுக்கு முக்கிய பங்கு உண்டு.

---

யுவகிருஷ்ணா May 28, 2010 11:31 AM

நல்ல பதிவு. நன்றி ரமேஷ் வைத்யா.

---

சின்ன அம்மிணி May 28, 2010 3:20 PM

//உங்கள் ஆழ்ந்த கருத்தும் வாசிப்பனுபவமும் பிரமிப்பாக இருக்கிறது..உங்கள் கருத்தோடு உடன்படுகிறேன்"//

இந்த பதில் பிடிச்சிருக்கு :) நல்ல பகிர்வு

Post a Comment





Copyright 2009 - புலம்பல்கள்.!

Theme design: Web Design Company
Sponsors: Website Hosting India, Web Hosting Company.